**செய்தி வெளியீடு எண்: 76** **நாள்: 29.01.2020**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (29.1.2020) தலைமைச் செயலகத்தில், எரிசக்தித் துறையின் சார்பில் தருமபுரி மாவட்டம் – மொரப்பூரில் 12 கோடியே 23 லட்சத்து 13 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 110/11 கி.வோ. துணை மின் நிலையத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், தமிழ்நாட்டின் 27 மாவட்டங்களில் 1,023 கோடியே 5 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 91 துணை மின் நிலையங்களையும் திறந்து வைத்தார்கள்.

மின்பாதையில் ஏற்படுகின்ற மின் இழப்பையும், மின்பராமரிப்பு செலவினங்களையும் குறைத்து, ஒவ்வொரு பகுதிக்கும் தேவைப்படுகின்ற உச்சகட்ட மின் தேவையை நிறைவு செய்யும் வகையில் சரியான மின் அழுத்தத்துடன், சீரான மின்சாரம் மக்களுக்கு வழங்கிட கூடுதல் துணை மின் நிலையங்கள் அமைப்பது அவசியமாகும் என்பதைக் கருத்தில் கொண்டு, தேவைக்கேற்ப புதிய மற்றும் தரம் உயர்த்தப்பட்ட துணை மின் நிலையங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு அமைத்து வருகிறது.

அந்த வகையில், தருமபுரி மாவட்டம் – மொரப்பூரில் 12 கோடியே 23 லட்சத்து 13 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 110/11 கி.வோ. துணை மின் நிலையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

மேலும், தூத்துக்குடி மாவட்டம் – தென்னம்பட்டியில் 418 கோடியே 88 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள ஒரு 400/230–110 கி.வோ. துணை மின் நிலையம்;

கிருஷ்ணகிரி மாவட்டம் – உத்தனப்பள்ளியில் 168 கோடியே 6 லட்சத்து 78 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள ஒரு 230/110 கி.வோ. துணை மின் நிலையம்;

திண்டுக்கல் மாவட்டம் – நல்லமன்னர் கோட்டை, ஈரோடு மாவட்டம் – தண்ணீர் பந்தல், தஞ்சாவூர் மாவட்டம் – முள்ளுக்குடி ஆகிய இடங்களில் 30 கோடியே

91 லட்சத்து 11 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மூன்று 110/33 கி.வோ. துணை மின் நிலையங்கள்;

கடலூர் மாவட்டம் – குறிஞ்சிப்பாடி மற்றும் கோரணப்பட்டு, திண்டுக்கல் மாவட்டம் – சித்தர்கள்நத்தம், ஈரோடு மாவட்டம் – காவிலிபாளையம், கன்னியாகுமரி மாவட்டம் – தெங்கம்புதூர், மதுரை மாவட்டம் – மாணிக்கம்பட்டி, சேலம் மாவட்டம் – மேச்சேரி, சிவகங்கை மாவட்டம் – A. தெக்கூர், தஞ்சாவூர் மாவட்டம் – ஊரணிபுரம் மற்றும் பட்டுக்கோட்டை நகரியம், திருவள்ளூர் மாவட்டம் – பூணிமாங்காடு, திருநெல்வேலி மாவட்டம் – வீரவநல்லூர், திருப்பூர் மாவட்டம் – இட்சிப்பட்டி மற்றும் பெருமாநல்லூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம் – பெட்டவாய்தலை ஆகிய இடங்களில் 41 கோடியே 51 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பதினைந்து 110/33 கி.வோ. துணை மின் நிலையங்கள் (விகிதாச்சார அறிமுகம்);

கோயம்புத்தூர் மாவட்டம் – தேவனாம்பாளையம், கடலூர் மாவட்டம் – வெள்ளக்கரை, திண்டுக்கல் மாவட்டம் – கீழக்கோட்டை, சிவகங்கை மாவட்டம் – இடையமேலூர், தேனி மாவட்டம் – வடவீரநாயக்கன்பட்டி, திருப்பூர் மாவட்டம் – ஆலாமரத்தூர் ஆகிய இடங்களில் 68 கோடியே 13 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள ஆறு 110/22 கி.வோ. துணை மின் நிலையங்கள்;

இராமநாதபுரம் மாவட்டம் –கீழக்கரை (மறு கட்டமைப்பு), திருப்பூர் மாவட்டம் – திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் பனப்பாளையம் ஆகிய இடங்களில் 23 கோடியே 12 லட்சத்து 8 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மூன்று 110/11 கி.வோ. துணை மின் நிலையங்கள்;

அரியலூர் மாவட்டம் –அம்பாபூர் மற்றும் தழுதாழைமேடு, கோயம்புத்தூர் மாவட்டம் – வாகராயம்பாளையம், கடலூர் மாவட்டம் – கீழக்கொல்லை (மாருதி நகர்), ஆலடி, முதனை, சேப்ளாநத்தம் (வடலூர்), புலியூர் (அம்பலவாணன் பேட்டை), கண்ணாடி (அடூர்அகரம்), மற்றும் வளையமாதேவி கீழ்பாதி (எறும்பூர்), செங்கல்பட்டு மாவட்டம் – மறைமலை நகர், திண்டுக்கல் மாவட்டம் – செக்கப்பட்டி (விருவீடு), ஈரோடு மாவட்டம் – பெரியகள்ளிப்பட்டி, இச்சிபாளையம், ஏளூர் மற்றும் லாகம்பாளையம், கரூர் மாவட்டம் – பணிக்கம்பட்டி, கிருஷ்ணகிரி மாவட்டம் – காளிங்காவரம், தொரப்பள்ளி, நாகொண்டப்பள்ளி,

பையனப்பள்ளி மற்றும் பெருகோபனபள்ளி, கன்னியாகுமரி மாவட்டம் – ராஜாக்கமங்கலம், மதுரை மாவட்டம் – மங்கலரேவு, திருவாதவூர், அய்யன்கோட்டை, அலங்காநல்லூர், மேலவளவு மற்றும் A.வெள்ளாளபட்டி, இராணிப்பேட்டை மாவட்டம் – பரவத்தூர் மற்றும் சென்னலேரி, சேலம் மாவட்டம் – பொட்டனேரி, சிவகங்கை மாவட்டம் – இளையாத்தங்குடி (கீழச்செவல்பட்டி), தஞ்சாவூர் மாவட்டம் – குறிச்சி, ஒரத்தநாடு, பேராவூரணி, அம்மாபேட்டை மற்றும் மேலதிருப்பந்துருத்தி, திருவண்ணாமலை மாவட்டம் – அரியபாடி, பெரும்பள்ளம், கடலாடி, கண்ணமங்கலம் (அழகுசேனை), ஆடையூர் மற்றும் சத்தியவாடி, திருவள்ளூர் மாவட்டம் – மாமண்டூர் மற்றும் பாலாபுரம், திருவாரூர் மாவட்டம் – முத்துப்பேட்டை மற்றும் திருத்துறைபூண்டி, தென்காசி மாவட்டம் – சாம்பவர்வடகரை, ஆழ்வார்குறிச்சி மற்றும் கீழப்பாவூர், திருநெல்வேலி மாவட்டம் – மணிமுத்தாறு மற்றும் திசையன்விளை, திருப்பூர் மாவட்டம் – புதுப்பை, பழங்கரை மற்றும் கருகம்பாளையம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் – சிறுகமணி மற்றும் எல். அபிஷேகப்புரம், திருப்பத்தூர் மாவட்டம் – குனிச்சி மற்றும் புதூர் நாடு, வேலூர் மாவட்டம் – பூஞ்சோலை, விழுப்புரம் மாவட்டம் – செஞ்சி ஆகிய இடங்களில் 272 கோடியே 42 லட்சத்து 62 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள அறுபத்தி இரண்டு 33/11 கி.வோ. துணை மின் நிலையங்கள்;

என மொத்தம் 1,035 கோடியே 28 லட்சத்து 53 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 92 துணை மின் நிலையங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி, மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன், தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு.தீரஜ் குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.விக்ரம் கபூர், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**